# வீட்டிலிருந்து கற்கும் மாணவருக்கு உதவும் பாடசாலை



குருநாகல் மாவட்டத்தில், நகர்ப்புறத்திலிருந்து குறிப்பிட்டளவு தொலைவிலுள்ள அமைதியான கிராமத்தில், ரம்மியான சூழலில் அமைந்துள்ள அமைதியான சிறியதோர் பாடசாலை இதுவாகும். தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் இப்பாடசாலை அமைந்துள்ளதால், அங்கு குறைவான எண்ணிக்கையிலான மாணவர்களே கல்வி கற்கின்றனர்.

உள்ளடங்கல் கல்வித் திட்டத்தை அப்பாடசாலையில் திறமையாக நடத்திச் செல்லும் பாடசாலையின் அதிபரை நாம் சந்தித்தோம். அவரே இதனை தலைமையேற்று நடத்திச் செல்கின்றார். உள்ளடங்கல் கல்வித் திட்டத்தை பாடசாலை ஊக்குவிக்கும் என, பாடசாலையின் வருடாந்த செயற்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு அருகிலுள்ள சிறுவர் இல்லத்தில் வசிக்கும் 20 பிள்ளைகள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். இதுகுறித்து அதிபர் எம்மிடம் இவ்வாறு பகிர்ந்துகொண்டார். “இந்தப் பிள்ளைகளில் சிலர், பல்வேறு காரணங்களுக்கான நன்னடத்தையை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டின்கீழ் உள்ளனர். அவர்களில் எவரும்

இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் வாழும் சிறுவர் இல்லத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலை இதுவாகும். ஆகவே, இப்பாடசாலை அவர்களை அன்புடன் வரவேற்கின்றது”.

உடல் மற்றும் அறிவுசார் குறைபாடுடைய நான்கு குழந்தைகள் அங்குள்ளதாக அதிபர் எம்மிடம் குறிப்பிட்டார். பாடசாலையில் விசேட கல்விப் பிரிவோ அல்லது விசேட கல்வியில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களோ இல்லை. எனினும், விசேட கல்விப் பிரிவு காணப்படும் தொலைதூர பாடசாலைகளுக்கு அனுப்பக்கூடிய வசதி அவர்களுடைய பெற்றோருக்கு இல்லை. ஆகவே, இந்தப் பாடசாலை அவர்களுக்கு உதவுகின்றது. “விசேட கல்விப் பிரிவு உள்ள பாடசாலைகளுடன் இணைந்து பணியாற்றவும் அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் நாம் முயற்சிக்கின்றோம்” என பாடசாலை அதிபர் குறிப்பிட்டார்.

தசைப்பகுதியில் பலவீனத்தை ஏற்படுத்தும் ஒரு மரபணுசார் நோய் காரணமாக இயங்கமுடியாத நிலையிலுள்ள மாணவர் ஒருவர் தற்போது பாடசாலைக்கு வருவதில்லை. குறித்த மாணவர், கடந்த வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்ததாக அதிபர் குறிப்பிட்டார். “அப்போது, அவர் ஒன்றரை வருட காலமாக நேரடியாக பாடசாலைக்குச் சென்று கற்கவில்லை. அவரது மூத்த சகோதரி தரம் 11இல் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். சகோதரி ஊடாகவே நாம் குறித்த மாணவரை தொடர்புகொண்டோம். முடிந்தவரை ஆசிரியர்கள் சென்று அவருக்கான கற்றல் உதவியை செய்தனர். சகோதரி ஊடாக அவருக்கான பாடங்கள் அனுப்பப்பட்டன. அவரது பயிற்சிப் புத்தகங்களை பாடசாலைக்கு கொண்டுவந்து ஆசிரியர்கள் திருத்தினர். தேவையான அறிவுறுத்தல்கள், அந்தப் புத்தகத்தில் வழங்கப்பட்டன. அவருக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் போன்ற ஏனைய வசதிகளை பாடசாலை செய்துகொடுத்தது. பரீட்சை

நிலையத்தில் அவருக்குத் தேவையான கூடுதல் வசதிகளை பரீட்சைகள் திணைக்களம் செய்துகொடுத்தது".

"இந்த மாணவர் தற்போது தரம் 6இல் கல்வி கற்கின்றார். ஆனால், இன்னும் பாடசாலைக்கு வரமுடியவில்லை. எனினும், கற்பதற்கான அவரது உரிமையை நாம் உறுதிசெய்ய வேண்டும். நடமாடும் ஆசிரியர்கள் எம்மிடம் இல்லை. ஆனால், அவருக்கான கல்வியை வழங்க நாம் முயற்சிக்க வேண்டும். அவரது சகோதரியும் தற்போது பாடசாலையிலிருந்து சென்றுவிட்டார். உயர்தரத்திற்காக அவர் வேறு பாடசாலையில் இணைந்து கற்கின்றார். ஆகையால், குறித்த மாணவருடன் தற்போது தொடர்புகொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. எவ்வாறாயினும், பாடப்புத்தகங்களையும் தேவையான அறிவுறுத்தல்களையும் நாம் ஏற்கனவே அவருக்கு அனுப்பியுள்ளோம். அவர் கற்பதற்கு உதவும் வழிகளை நாம் தேடிக்கொண்டிருக்கின்றோம்" என அதிபர் மேலும் கூறினார்.

இந்த மாணவருக்கு வீட்டிலிருந்து கல்விகற்கும் அல்லது தொலைநிலைக் கல்வி என்ற கலப்பு அணுகுமுறையை பயன்படுத்துவதற்கு பாடசாலை முயற்சிக்கின்றது.

இந்த மாணவருக்கு சக்கர நாட்காலி போன்ற உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு உள்ளூர் சமூகத்தின் உதவியை அதிபர் நாடியுள்ளார். முன்னாள் அதிபரின் சேவைக்காலத்தில், பாடசாலை வளாகத்தினை அணுகும் வசதியினை பாடசாலை மேம்படுத்தியுள்ளது. குறைபாடுடைய மாணவர்கள் ஆரம்பநிலை வகுப்பறைகளுக்குச் செல்வதை இலகுபடுத்தும் வகையிலான துணை பாதையொன்று அமைக்கப்பட்டது. அதன் பின்னர், வாகனத்தில் வரும் மாணவர்கள், ஆரம்பநிலை வகுப்பறையின் வாயிற்படி அருகிலேயே வந்திறங்கலாம்.

வெவ்வேறு விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்கள், ஒரே வகுப்பறையில் ஒன்றாகவே கல்வி கற்கின்றனர். விசேட கல்வித்

தேவை கொண்ட மாணவர்கள் மீது பிரத்தியேக கவனம் செலுத்த முடிந்தளவு ஆசிரியர்கள் முயற்சித்து வருகின்றனர்.

“தம்முடன் கற்கும் சக மாணவர்களை சரிசமமாக நடத்த வேண்டும் என்பதை நாம் மாணவர்களுக்கு போதித்துள்ளோம். மாணவர்கள் ஒருவரையொருவர் பாரபட்சமாக நடத்துவதையோ கொடுமைப்படுத்துவதையோ நாம் இப்போது பார்த்ததில்லை” என உள்ளடங்கல் கல்வியை ஒழுங்குபடுத்தும் ஆசிரியர் எம்மிடம் கூறினார். அவரை சந்திப்பதற்காக நாம் சென்றபோது, அவதானக் குறை மிகையியக்க குறைபாடுடைய (ADHD) மாணவன் ஒருவருக்கு வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் உதவிசெய்துகொண்டிருந்தார்.

அனைவருக்கும் கல்வியை வழங்குவதற்கு தன்னால் முடிந்த சகல விடயங்களையும் இந்த சிறிய பாடசாலை செய்கின்றது. பாடசாலை அதிபர் தமது பணிகளை மிகவும் திறம்படச் செய்யும் உற்சாகமுள்ள ஒருவராவார். உள்ளடங்கல் கல்விக் கொள்கைகளை புரிந்துகொண்டு பாடசாலையில் அவற்றை செயற்படுத்துவற்கு, ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாடசாலை சமூகத்தையும் அவர் வழிநடத்துகின்றார்.